# மகளிர் உரிமைத்தொகை திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்



தருமபுரி மாவட்டம், தொப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகளிர் உரிமைத்தொகை திட்டத்துக்கான விண்ணப்பங்களை மின்னணு முறையில் பதிவேற்றம் செய்யும் பணியைத் தொடங்கி வைத்துப் பார்வையிடுகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.என்.நேரு, மாவட்ட ஆட்சியர் கி.சாந்தி உள்ளிட்டோர்.

**தருமபுரி, ஜூலை 24:** தமிழக மகளிரின் வாழ்வில் 'கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை திட்டம்' ஏற்றத்தை ஏற்படுத்தும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

மகளிருக்கு மாதந்தோறும் ரூ. 1000 வழங்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை அவர் தருமபுரி மாவட்டம், தொப்பூரில் திங்கள்கிழமை தொடங்கிவைத்தார்.

திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளுள் ஒன்றான, மகளிருக்கு மாதந்தோறும் ரூ. 1000 உதவித் தொகை வழங்கும் திட்டம் 'கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை திட்டம்' என்ற பெயரில் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்துக்கான விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் பணியைத் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி, தருமபுரி மாவட்டம், தொப்பூரில் திங்கள்கிழமை நடைபெற்றது.

தொப்பூர் அரசுப் பள்ளியில் காலை 9.30 மணிக்கு மகளிர் உரிமைத்தொகை திட்ட விண்ணப்பங்களை குடும்பத் தலைவிகளிடமிருந்து பெற்று மின்னணு முறையில் பதிவு செய்யும் பணியை முதல்வர் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். பிறகு விண்ணப்பதாரர்களிடம் கலந்துரையாடினார்.

தொடர்ந்து, காலை 9.45 மணிக்கு மகளிர் சுயஉதவிக் குழுவினரிடம் கலந்துரையாடிய அவர், காலை 10 மணிக்கு பெண்களுக்கான மருத்துவ முகாமைப் பார்வையிட்டார். இதையடுத்து, தொப்பூரில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

**மகளிர் சுயஉதவிக் குழுக்கள்:** கடந்த 1989இல் இதே தருமபுரி மாவட்ட மண்ணில்தான் முன்னாள் முதல்வர் கருணாநிதி, பெண்களின் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக மகளிர் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்கி வைத்தார். ஏழை, எளிய மகளிருக்காக தருமபுரியில் விதைத்த மகளிர் சுயஉதவிக் குழுக்கள் என்ற விதை, தற்போது, தமிழகம் முழுவதும் பரவி இருக்கிறது.

தமிழகத்தில் தற்போது 4,57,000 சுயஉதவிக் குழுக்கள் செயல்படுகின்றன. இவற்றில் 3,90,633 குழுக்களுக்கு ரூ. 25,642 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2006-2011 ஆம் ஆண்டுகளில் துணை முதல்வராக நான் பதவி வகித்தபோது, ஆயிரக் கணக்கான சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள், சுழல்நிதிகளை வழங்கியிருக்கிறேன். இந்த நிலையில், தற்போது இதே தருமபுரியில் மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

**மகளிர் பேருந்துப் பயணம்:** சட்டப் பேரவை பொதுத் தேர்தல் முடித்து ஆட்சி அமைந்த பின், கடுமையான நிதி நெருக்கடியையும் பொருட்படுத்தாமல் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்துப் பயணம் என்ற திட்டத்தில் கையொப்பமிட்டேன். இத்திட்டத்தில், நாளொன்றுக்கு 36 லட்சம் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்மூலம் பெண்கள் மாதத்துக்கு ரூ. 800 முதல் ரூ. 1,000 வரை சேமிக்க முடிகிறது.

இதேபோல, உயர்கல்வி பயிலும் மாணவியருக்கு மாதம் ரூ. 1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தில் தமிழகத்தில் 2,11,506 மாணவியர் மாதம் ரூ. 1,000 பெற்றுப் பயனடைகின்றனர். காலை உணவுத் திட்டத்திலும் ஏராளமான மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகின்றனர்.

**மகளிர் உரிமைத்தொகை திட்டம்:** இந்த வரிசையில், மகளிரின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் உதவித்திட்டம் என்று அழைக்காமல், 'கலைஞரின் மகளிர் உரிமைத்திட்டம்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதில் ஒரு கோடி குடும்பத் தலைவிகள் மாதம் ரூ. 1,000 பெற உள்ளனர்.

நடைபாதையில் கடை வைத்திருக்கும் மகளிர், மீனவ மகளிர், கட்டுமானம், சிறுதொழில் புரிகின்ற, சொற்ப வருவாய் ஈட்டுகின்ற மகளிர் என யாருக்கெல்லாம் ரூ. 1,000 தேவைப்படுமோ அவர்களுக்கு இந்த உரிமைத்தொகை கிடைக்கும். இந்தத் திட்டம் செப். 15-ஆம் தேதி அண்ணா பிறந்த நாளில் தொடங்கி வைக்கப்பட உள்ளது. இதன்மூலம் மகளிரின் சமூக, பொருளாதார வாழ்வில் ஏற்றம் ஏற்படும்.

இத்திட்டத்துக்கு விண்ணப்பங்கள் பெற தமிழகம் முழுவதும் 35,925 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வதற்காக 68,190 தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதேபோல, முகாம்களில் உதவி புரிவதற்காக 35,925 உதவி தன்னார்வலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் இந்த முகாம்கள் செயல்படும்.

இதற்காக முன்கூட்டியே டோக்கன்கள் வழங்கப்பட்டு அதில் தேதி, நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். குடும்பத் தலைவிகள் அந்த நேரத்தில் சென்று விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யலாம். அவ்வாறு விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும்போது உங்களது கைப்பேசி எண்ணுக்கு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான குறுஞ்செய்தி வரும். எனவே, தகுதியானவர்கள் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்து பயனடைய வேண்டும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை, உழவர்நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தருமபுரி மக்களவை உறுப்பினர் டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஜி.கே.மணி (பென்னாகரம்), எஸ்.பி.வெங்கடேஸ்வரன் (தருமபுரி), இரா.ராஜேந்திரன் (சேலம் வடக்கு), முதல்வரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தருமபுரி மாவட்ட ஆட்சியர் கி.சாந்தி, முன்னாள் அமைச்சர் பி.பழனியப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதல்வரின் வருகையையொட்டி, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து சுமார் 1,000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். தருமபுரி கிழக்கு, மேற்கு மாவட்ட திமுக சார்பில் கட்சித் தொண்டர்கள் சாலையின் இருபுறங்களிலும் நின்று கொடி, பதாகைகளை ஏந்தி முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

**மகளிர் உரிமைத் தொகை: 91 லட்சம் விண்ணப்பங்கள் விநியோகம்**
(செய்தி உள்ளே)

EVA STALIN IAS

# போரும் வயிறும்!

தேவையான அளவில் உணவு உற்பத்தி இருந்தும்கூட, முறையான ஏற்றுமதிகள் இல்லாமல், தேவைக்கு உணவுப் பொருள்கள் கிடைக்காததால் ஏற்படும் விலைவாசி ஏற்றத்தை விரைவில் சந்திக்க இருக்கிறது மனித இனம். வளர்ச்சி அடைந்த பணக்கார நாடுகளைவிட, போதிய நிலப்பரப்பும், விவசாயமும் இல்லாமல் உணவுப் பொருள்களின் இறக்குமதியை நம்பி இருக்கும் ஏழை நாடுகள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட இருக்கின்றன.

கிரீமியா தீபகற்பத்தில் உள்ள முக்கியமான இணைப்புப் பாலத்தை உக்ரைன் தகர்த்தியதற்குப் பதிலடியாக, உக்ரைனின் ஒடேஸா துறைமுகத்தின் மீது போர்க்கப்பல் மூலம் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது ரஷியா. கடந்த வாரம் செவ்வாய்க் கிழமை நடந்த இந்தத் தாக்குதல், முன்னறிவிப்புடன் நடத்தப்பட்டது. அதற்கு முந்தைய நாள்தான் கருங்கடல் பகுதியில் உள்ள துறைமுகங்கள் மூலம் உக்ரைன் தனது ஏற்றுமதிகளை நடத்தும் ஒப்பந்தத்தை ரஷியா ரத்து செய்வதாக அறிவித்தது.

2022 ஜூலை மாதம் துருக்கி அதிபர் எர்டோகனும், ஐ.நா. சபையின் பிரதிநிதிகளும் ரஷியாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டனர். அதன்படி ரஷியாவின் கண்காணிப்புடன் ஒடேஸா, க்ரோனோமோர்ஸ்க், யுஷ்னி ஆகிய மூன்று துறைமுகங்களில் இருந்தும் உணவு தானியங்களை உக்ரைன் ஏற்றுமதி செய்து கொள்வது என்று முடிவாகியது. உணவு தானியங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களை சோதனை செய்யவும், கருங்கடல் பகுதியை அவை பாதுகாப்பாகக் கடந்து செல்வதை உறுதிப்படுத்தவும் ரஷியாவுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஏறத்தாழ 3.3 கோடி டன் உணவு தானியங்கள், ஐ.நா.வின் உலக உணவுத் திட்டத்திற்கும், மிகவும் பின்தங்கிய நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டன. சோளம், கோதுமை, சூரியகாந்தி எண்ணெய், பார்லி உள்ளிட்ட உணவு தானியப் பொருள்கள் கடந்த ஓராண்டாகத் தடையின்றி உக்ரைனால் ஏற்றுமதி செய்யப்பட்டதால்தான், உணவுப் பற்றாக்குறை ஏற்படாமல் இருந்தது.

உலகிலேயே மிக அதிகமாக கோதுமை, சோளம், சூரியகாந்தி உற்பத்தி செய்யும் நாடுகள் ரஷியாவும், உக்ரைனும்தான். குறிப்பாக, ஐரோப்பிய நாடுகள் உக்ரைனைத்தான் தங்களது தானியத் தேவைக்கு நம்பி இருக்கின்றன. பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகளின் உணவு தானிய தேவையைப் பூர்த்தி செய்வது ரஷியாவும், உக்ரைனும்தான்.

கடந்த ஆண்டு நிலவிய சூழலுடன் ஒப்பிடும்போது, நிலைமை அந்த அளவுக்கு மோசமில்லை. நடப்பு ஆண்டில் உக்ரைனின் கோதுமை, சோளம் உற்பத்தி 30% முதல் 40% குறைவாகவே இருக்கும் என்பதை சர்வதேசச் சந்தை முன்கூட்டியே கணித்திருந்தது. தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் போர் காரணமாகப் பலர் விவசாயம் செய்யவில்லை.

அடுத்ததாக பிரேஸில், அமெரிக்கா, ஆர்ஜென்டீனா நாடுகளில் சோளமும், ரஷியாவில் கோதுமையும் அளவுக்கு அதிகமாக உற்பத்தியாகி இருப்பதால், உக்ரைனால் ஏற்பட்டிருக்கும் குறைபாடு ஈடுகட்டப்படும். உலகின் மிக அதிகமாக கோதுமை ஏற்றுமதி செய்யும் நாடாக ரஷியா உயர்ந்திருக்கிறது. மத்திய கிழக்கு நாடுகள், வடக்கு ஆப்பிரிக்க நாடுகள், மத்திய ஆசியா உள்ளிட்டவை ரஷியாவில் இருந்து தாராளமாக கோதுமையை இறக்குமதி செய்கின்றன. ரஷிய கச்சா எண்ணெயை இந்தியா வாங்கி ஏற்றுமதி செய்வதுபோல, அவற்றில் சில நாடுகள் கோதுமை ஏற்றுமதியிலும் ஈடுபடுகின்றன.

சமையல் எண்ணெயின் நிலைமையும் மோசமில்லை. பிரேஸில், ஆர்ஜென்டீனா நாடுகள் சோயாபீன்ஸ் எண்ணெயையும், இந்தோனேஷியா, மலேசியா இரண்டும் பாமாயிலையும், கனடா ராப்சீட் எண்ணெயையும் அதிக அளவில் உற்பத்தி செய்து வருவதால் மிகப் பெரிய தட்டுப்பாடு ஏற்பட வழியில்லை. கருங்கடல் ஒப்பந்தத்தை மேலும் நீட்டிப்பதில்லை என்கிற ரஷியாவின் நிலைப்பாடு, விலைவாசியை அதிகரிக்குமே தவிர, தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிடாது என்று சர்வதேச வர்த்தகர்கள் கருதுகிறார்கள்.

உக்ரைனைப் பொருத்தவரை, தரை மார்க்கமாக ஐரோப்பாவுக்குத் தனது தானிய உற்பத்தியை எடுத்துச் செல்கிறது. துருக்கி அனுமதிக்குமானால், பாஸ்பரஸ் ஜலசந்தி வழியாகக் கப்பல்கள் மூலம் உணவு தானிய ஏற்றுமதியைத் தொடர முடியும் என்று நம்புகிறது. துருக்கி எந்த அளவுக்கு ரஷியாவைப் பகைத்துக் கொண்டு உக்ரைனுக்கு உதவும் என்பது தெரியாது.

அமெரிக்காவின் ரஷியா மீதான உணவு ஏற்றுமதித் தடை, பிரிட்டனின் ரஷிய கப்பல்கள் மீதான காப்பீட்டுக்கான அனுமதி மறுப்பு, ஐரோப்பிய கட்டமைப்பின் ரஷிய உரங்கள் மீதான தடை ஆகியவற்றை அகற்ற ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் முயற்சி எடுத்து வருகிறார். தனது தானிய உற்பத்திகளையும், உரங்களையும் சர்வதேசச் சந்தையில் விற்பதற்கான தடை அகற்றப்பட்டால், கருங்கடல் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கத் தயார் என்பது ரஷிய அதிபர் புதினின் நிலைப்பாடு.

பெரிய நாடுகள் ஓரளவு சமாளித்துவிடும். விலை உயர்வு ஏற்பட்டாலும்கூட அவர்களது பொருளாதாரத்தால் தாக்குப்பிடிக்க முடியும். கடுமையான பருவநிலையாலும், உள்நாட்டுப் போர்ச் சூழலாலும் பாதிக்கப்பட்டிருக்கும் யேமன், ஆப்கானிஸ்தான், சோமாலியா, சூடான், கென்யா, லெபனான், எகிப்து போன்ற நாடுகளில் ஒருவேளை உணவுக்கு வழியில்லாமல் லட்சக்கணக்கானோர் இருக்கிறார்கள். அவர்கள் உலக உணவுத் திட்டத்தை நம்பி உயிர் வாழ்கிறார்கள். அவர்கள் கதி என்னவாகும்?

உணவு உற்பத்தி இருந்தும் பசியால் வாடுகிறார்களே, இதற்கு என்னதான் தீர்வு?

# கருப்புப் பணத்தை ஒழிக்க...

**சுபாஷ் சந்திரன்**

மறுக்க முடியாத வகையில், ரூ.500, ரூ.1,000 நோட்டை பண மதிப்பு நீக்கம் செய்ததன் மூலம் கருப்புப் பணத்தை ஒழிக்கும் இலக்கை அடைய முடியவில்லை, அது இன்னும் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. இந்திய சந்தையில் இருந்து கருப்புப் பணத்தை அகற்ற ரூ.2,000 நோட்டு செல்லாது என்ற முடிவு மற்றொரு தவறான அரசியல், பொருளாதார முடிவாக இருக்கலாம்.

கருப்புப் பணமும் பொருளாதார வளர்ச்சியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என்று பலர் நம்புகின்றனர். இந்த அறிவியலற்ற தத்துவத்தை நாம் புறக்கணித்தாலும், பண மேலாண்மையின் மிக முக்கியமான இயக்கவியல் இந்திய கலாசாரத்துடன் தொடர்புடையது.

பணப் பரிவர்த்தனைகள் சமூக, கலாசார நடைமுறைகளில் ஆழமாக வேரூன்றியுள்ளன. அரசாணை அல்லது அறிக்கை மூலம் ஒரே இரவில் பணப் பரிவர்த்தனைகளை அகற்றுவது சாத்தியமில்லை.

அமெரிக்கா போன்ற பிற நாடுகளில் டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் சூழலைப் புரிந்துகொள்வது முக்கியம். எனது சமீபத்திய அமெரிக்க விஜயத்தின்போது, அதிக வரி விதிக்கப்பட்ட போதிலும் மக்கள் தங்கள் நிதிப் பரிவர்த்தனைகளை மறைக்கவோ அல்லது கையாளவோ இல்லை. தாங்கள் செலுத்தும் வரியானது ஒரு தனி நபர் அல்லது சமூக காரணத்துக்காக ஏதேனும் ஒரு வடிவத்தில் திருப்பித் தரப்படும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

உதாரணமாக, ஒரு முதியோர் இல்லத்துக்குச் சென்றபோது, அங்கு உள்ளவர்களுக்கு ஒயின் வழங்கப்பட்டது. தனிப்பட்ட முறையில் தங்களைக் கையாள முடியாத வயதான வரி செலுத்துபவர்களுக்கு அளிக்கப்படும் உபசரிப்பு வியக்க வைத்தது. அவர்கள் தேவதூதர்களைப் போல பராமரிக்கப்பட்டனர்.

சில தனிநபர்கள் ஏன் அதிக வரி செலுத்தத் தயங்குகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது முக்கியமானது. இந்தியாவில் பலர் தங்களுடைய நிதி உளவியல், மத மற்றும் தார்மிக நம்பிக்கைகளைப் பாதிக்கும் நிச்சயமற்ற அச்சத்தால் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இதன் விளைவாக, வரி செலுத்துவோர் ஆதரவற்றவர்களாகவும் தனியாகவும் உணரலாம்.

முதுமையில் மருத்துவச் செலவுகளுக்கு, குறிப்பாக விரிவான சமூகப் பாதுகாப்பு அமைப்பு இல்லாமல், அரசு ஓய்வூதியம்கூட போதுமானதாக இருக்காது. புரிந்துகொள்ளக்கூடிய வகையில், சிலர் அதிக வரிகளைச் செலுத்தத் தயங்கலாம். ஏனெனில், தங்கள் வரி பங்களிப்புகள் சரியாகப் பயன்படுத்தப்படாது என்று அவர்கள் நினைக்கலாம்.

இருப்பினும், வரி உள்பட அனைத்துப் பணமும் கணக்கில் வருவதை டிஜிட்டல் பரிவர்த்தனைகள் உறுதி செய்கின்றன. வரி செலுத்துதல், டிஜிட்டல் பொருளாதாரத்தை தழுவுதல் போன்ற எண்ணங்கள் வளர்ந்த நாடுகளில் இருந்து தழுவியிருந்தாலும், இந்திய குடிமக்கள் மேற்கு நாடுகளுடன் ஒப்பிடக் கூடிய சுகாதார நலன்களை எதிர்பார்க்கிறார்கள்.

சமூகப் பாதுகாப்பு சந்தேகத்துக்கு இடமின்றி முக்கியமானது, மேலும் கடுமையான கட்டுப்பாடுகள் மூலம் கருப்புப் பணத்தை முழுவதுமாக ஒழிப்பது சாத்தியமில்லை. இந்தச் சிக்கலைத் தீர்க்க முந்தைய நிர்வாகங்களின் முயற்சிகள் பலனளிக்கவில்லை.

பிரதமர் நரேந்திர மோடி அரசின் பண மதிப்பிழப்பு முயற்சிகள் முழு வெற்றியடையாமல் போகலாம். கணக்கில் வராத ரூ.2,000 நோட்டுகளை வைத்திருப்பவர்கள், இடைத்தரகர்கள் மூலம் ரூ.500 நோட்டுகளுக்கு மாற்றுவதற்கான வழிகளைக் கண்டுபிடித்திருக்கலாம் என்பதை ஒப்புக்கொள்வது முக்கியம்.

இத்தகைய முயற்சிகளின் வெற்றி, இந்தியப் பொருளாதாரத்தை மேம்படுத்த மோடி அரசு துணிச்சலான நடவடிக்கை எடுக்கவும், ஆக்கபூர்வமாக சிந்திக்கவும் தயாராக உள்ளது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை, வலுவான தலைமையுடன், தேசத்தின் முன்னேற்றத்துக்காக, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி மோடிக்கு உள்ளது. எதிர்மறையான ஆலோசகர்களையும் மறுப்பாளர்களையும் புறக்கணிப்பது, கருப்புப் பணத்தை பிரதான நீரோட்டத்திற்குக் கொண்டுவருவது போன்ற பயனுள்ள தீர்வுகளைச் செயல்படுத்துவது முக்கியம்.

காலாவதியான வாய்மொழி உத்தரவாதங்கள், அரசு முன்மொழிவுகளை ஆதரிக்க தனிநபர்களை நம்ப வைக்கப் போதுமானதாக இருக்காது. கருப்புப் பணத்தைத் திறம்பட எதிர்த்துப் போராடுவதற்கு பொருத்தமான சட்டம் முக்கியமானது.

ஏனெனில், இந்த நிதியை பிரதான நீரோட்டத்துக்குக் கொண்டு வருவதன் மூலம் மக்கள் சிவில் அல்லது கிரிமினல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள மாட்டார்கள் என்று மக்களுக்கு உறுதியளிக்க முடியும். இது பொருளாதாரத்தில் இருந்து கருப்புப் பணத்தை ஒழிக்க அதிகமான மக்களை ஊக்குவிக்கும்.

வருமான வரித் துறை போன்ற அதிகாரிகளின் விசாரணைக்கு முகம் கொடுக்காமல் பொதுமக்கள் எவ்வளவு கருப்புப் பணத்தையும் வங்கிகளில் டெபாசிட் செய்ய அனுமதிக்கும் சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசின் மீது மக்கள் நம்பிக்கையை மீட்டெடுக்க ஐடி , ரெய்டுகள், விசாரணைகளுக்கு 90 நாள்கள் தடை விதிக்க வேண்டும்.

முதலீடு செய்யப்பட்ட பணம் குறைந்த பட்ச வட்டியுடன் பத்து ஆண்டுகளுக்கு முடக்கப்பட்டு, முதிர்வு முடிந்தவுடன் எந்த கேள்வியும் இல்லாமல் டெபாசிட் செய்பவர்களுக்குத் திருப்பித் தர வேண்டும்.

இந்த முடக்கப்பட்ட பணம், இந்தியாவின் வளர்ச்சியை ஆதரிக்கவும், தேசிய வளர்ச்சியை மேம்படுத்தவும், சர்வதேச கடன்களை சார்ந்திருப்பதைக் குறைக்கவும் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புகளுக்குப் பயன்படுத்தப்படலாம்.

நிதித்துறையில் துணிச்சலான நகர்வுகளை மேற்கொள்வதும், குறிப்பிடத்தக்க முடிவுகளை செயல்படுத்துவதும் கருப்புப் பணத்தை ஒழிப்பதில் முக்கியமான படியாக இருக்கும். பரிந்துரைகளைப் பின்பற்றும் ஒரு தன்னார்வ வெளிப்படுத்துதல் திட்டம் 2023 -ஆம் ஆண்டில் நிதி வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க தருணத்தைக் குறிக்கும்.

வங்கிகளில் டெபாசிட்டுகள் மற்றும் பத்திரங்கள் மூலம் அதிக அளவில் முதலீடு செய்ய ஊக்குவிக்க வருமான வரி அமைப்பில் தீவிர சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். கூடுதலாக, வரி செலுத்துவோர் தேவைப்படும்போது அல்லது அவர்களின் வயதான காலத்தில் அதிக வரிகளை அதிகாரபூர்வமாக செலுத்த ஊக்குவிப்பதற்காக சேவைகள் வடிவில் முதலீட்டின் மீதான வருவாயைப் பெற வேண்டும்.

EVA STALIN IAS

# மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உதவித் தொகைகள் இரு மடங்காக அதிகரிப்பு

## கூடுதல் நிதி ஒதுக்கி அரசு உத்தரவு

**சென்னை, ஜூலை 24:** தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் வாயிலாக வழங்கப்பட்டு வரும் விபத்து நிவாரணம், மருத்துவம் உள்ளிட்ட உதவித்தொகைகள் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளன. இதற்காக கூடுதல் நிதி ஒதுக்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் தொடர்பான திட்டம் உள்பட சுமார் 52 நலத் திட்டங்கள் துறையின் நல ஆணையரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், பேரவையில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்தில், 'தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் வாயிலாக வழங்கப்பட்டு வரும் விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி, இதர உதவித் தொகைகள் உயர்த்தப்படும் எனவும், இதற்காக ரூ.2 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்' எனவும் முதல்வர் தெரிவித்தார். இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில் உரிய பரிந்துரைகளை, மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் தனது கடிதம் மூலமாகத் தெரிவித்திருந்தார்.

அந்தக் கடிதத்தில், 'தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தில் சுமார் 10.11 லட்சம் பேர் உறுப்பினர்களாக பதிவு செய்து இருப்பதாகவும், பல்வேறு உதவிகள் வாரியம் மூலமாக வழங்கப்படும் உதவித்தொகைகளை உயர்த்தும் நோக்கில், கூடுதலாக ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய கூறப்பட்டிருந்தது.

இதையேற்று, மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் மூலமாக வழங்கப்பட்டு வரும் விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி மற்றும் இதர உதவித் தொகைகளை உயர்த்தி வழங்க வசதியாக கூடுதலாக ரூ.2 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கி உத்தரவிடப்படுகிறது.

அதன்படி, விபத்தால் இறந்த நல வாரிய உறுப்பினரின் குடும்பத்துக்கான நிவாரணம் ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.2 லட்சமாகவும், கை அல்லது கால் இழப்பு, இரு கண்களில் பார்வை இழப்பு மற்றும் முழுமையான செயல் இழப்பு ஆகியவற்றுக்கும் ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.2 லட்சமாகவும் நிவாரணம் உயர்த்தப்பட்டுள்ளது. நிரந்தர குறைபாடு தவிர்த்த மருத்துவ செலவினம் ரூ.25 ஆயிரத்தில் இருந்து ரூ.50 ஆயிரமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 1 பயிலும் நல வாரிய உறுப்பினரின் மகள், மகனுக்கு ரூ.1,000-லிருந்து ரூ.2 ஆயிரமாகவும், பிளஸ் 2 படிக்கும் மகள், மகனுக்கு ரூ.1,500-லிருந்து ரூ.3 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. கல்லூரிப் படிப்பு படிப்பவர்களுக்கு ரூ.1,500-லிருந்து ரூ.3 ஆயிரமாகவும், முதுநிலைப் படிப்பு படிப்போருக்கு ரூ.2 ஆயிரத்தில் இருந்து ரூ.4 ஆயிரமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொழிற்கல்வி படிப்போருக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைகள் ரூ.6 ஆயிரம் முதல் ரூ.8 ஆயிரம் வரையிலும் உயர்த்தப்பட்டுள்ளது என மாற்றுத் திறனாளிகள் நலத் துறை செயலர் இரா.ஆனந்தகுமார் வெளியிட்ட உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் ஊராட்சிகளின் எல்லைகள் மறுவரையறை செய்யப்படுமா?

**ஆ. நங்கையார் மணி**

**திண்டுக்கல், ஜூலை 24:** தமிழகத்திலுள்ள ஊராட்சிகளின் எல்லைகளை தற்போதைய மக்கள் தொகைக்கு ஏற்ப மறுவரையறை செய்து, புதிதாக 6,000 ஊராட்சிகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை தமிழக அரசு முன்னெடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தமிழகத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஊராட்சி நிர்வாகம் நடைபெற்று வந்ததற்கான கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியச் சான்றுகள் உள்ளன. ஆனாலும் ஆங்கிலேயர்கள் ஆட்சியின் போது ரிப்பன் பிரபுவால் 1884-ஆம் ஆண்டு தான் உள்ளாட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. இதன் பிறகு 1920-ஆம் ஆண்டு கிராம ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது.

1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி, 3 அடுக்கு உள்ளாட்சி அமைப்பு முறை (ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட வளர்ச்சி மன்றம்) அமலுக்கு வந்தது. 1992-ஆம் ஆண்டு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 73, 74-இல் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதை அடுத்து, சுமார் 46 ஆண்டுகளாக மாநிலப் பட்டியலில் இருந்த ஊராட்சி நிர்வாகம் பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது.

இதேபோன்று அமைப்பு ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இதன்படி, தமிழகத்தில் 12,525 ஊராட்சிகளும், 385 ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளன. இந்த உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டு 63 ஆண்டுகள் கடந்தும்கூட ஊராட்சிகளுக்கான எல்லைகளை மறுவரையறை செய்வதற்கு எந்தவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேபோல, ஊராட்சி ஒன்றியங்களைப் பொருத்தவரை கடந்த 27 ஆண்டுகளில் 3 புதிய ஒன்றியங்கள் மட்டுமே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

**மக்கள் தொகை 5 ஆயிரமாக நிர்ணயம்:** தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 -இன் படி, ஊராட்சிகளுக்குகுறைந்தபட்சம் 500 முதல் அதிகபட்சமாக 5,000 மக்கள்தொகை இருக்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது.

இன்றைய சூழலில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகையுடன் 1,000 ஊராட்சிகளும், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகையுடன் சுமார் 8 ஆயிரம் ஊராட்சிகளும் உள்ளன.

> **இன்றைய சூழலில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகையுடன் 1,000 ஊராட்சிகளும், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகையுடன் சுமார் 8,000 ஊராட்சிகளும் உள்ளன.**

1994 ஊராட்சிகள் சட்டத்தின்படி தற்போதைய மக்கள்தொகைக்கு ஏற்ப ஊராட்சிகளை மறுசீரமைப்பு செய்தால், தமிழகத்தில் புதிதாக 6,000 ஊராட்சிகள் உருவாகக் கூடும்.

**50-க்கும் மேற்பட்ட ஊராட்சிகளுடன் 20 ஒன்றியங்கள்:** இதேபோல, ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 20 முதல் 25 ஊராட்சிகள் இருந்தால் மட்டுமே வளர்ச்சிப் பணிகளை எளிதாக மேற்கொள்ள முடியும் எனக் கூறப்படுகிறது. ஆனால், 20 ஊராட்சி ஒன்றியங்களில் தலா 50-க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இதுபோன்ற பெரிய ஒன்றியங்களில் நிர்வாக ரீதியாக பல்வேறு பிரச்னைகள் உள்ளன. தமிழகத்தைப் பொருத்தவரை வட்டங்களைப் பிரிப்பதற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம், புதிய ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்க வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

இதுதொடர்பாக தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநிலச் செயலர் மு. வீரகடம்பு கோபு கூறியதாவது: தமிழகத்தில் ஊராட்சி எல்லைகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டும். 25-க்கு மேற்பட்ட ஊராட்சிகளைக் கொண்ட பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, புதிய ஒன்றியங்களை உருவாக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

தமிழகத்தில்2024-ஆம் ஆண்டு இறுதியில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கான முன்னேற்பாடுகள் 2024 செப்டம்பரில் தொடங்கும்.

அந்த வகையில் ஊராட்சி எல்லைகள் மறுசீரமைப்பு ஆணையத்தை அமைப்பதற்கும், இதை அரசிதழில் வெளியிடுவதற்குமான பணிகளை இப்போது முதல் அரசு தொடங்கவேண்டும்.

புதிய வட்டங்கள், மாவட்டங்கள் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆனால், நிர்வாகத்தின் தொடக்க நிலையிலுள்ள ஊராட்சிகளின் எல்லைகள் மறுவரையறை என்பது 60 ஆண்டுகளுக்கும் மேலாக கண்டுகொள்ளப்படவில்லை.

ஊராட்சி எல்லைகளை மறுசீரமைப்பு செய்வது, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் செப். 13 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளோம் என்றார் அவர்.

# ஞானவாபியில் அறிவியல்பூர்வ ஆய்வு தற்காலிக நிறுத்தம்

## மசூதி தரப்பு கோரிக்கையை கேட்க உயர்நீதிமன்றத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு

**புது தில்லி, ஜூலை 24:** ஞானவாபி மசூதியில் தொல்லியல் துறையின் அறிவியல்பூர்வ ஆய்வை புதன்கிழமை (ஜூலை 26) மாலை 5 மணி வரை நிறுத்திவைக்குமாறு திங்கள்கிழமை உத்தரவிட்ட உச்ச நீதிமன்றம், மசூதி குழு தரப்பு கோரிக்கையை பரிசீலனை செய்யுமாறு அலாகாபாத் உயர் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது.

உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், 30 பேர் கொண்ட இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை (ஏஎஸ்ஐ) உறுப்பினர்கள் மசூதிக்குள் ஆய்வுப் பணிகளை திங்கள்கிழமை காலை தொடங்கவிருந்த நிலையில், இந்த உத்தரவை உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

ஞானவாபி மசூதியின் வெளிப்புறச் சுவரில் உள்ள ஹிந்து கடவுள் சிலைகளை வழிபட அனுமதிக்கக் கோரி தில்லியைச் சேர்ந்த 5 பெண்கள் வழக்குத் தொடுத்தனர். இதை யடுத்து, நீதிமன்ற உத்தரவின்படி மசூதியில் ஆய்வு நடத்திய தொல்லியல் துறையினர் சிவலிங்கம் உள்ளதாக தெரிவித்தனர்.

ஆனால், அது மசூதியில் உள்ள நீர்த்தேக்க தொட்டியின் நடுவே உள்ள நீரூற்று சிலை என மசூதி நிர்வாகம் தெரிவித்தது. பல்வேறு மேல்முறையீடுகளைத் தொடர்ந்து, அந்தப் பகுதியை முடிசீல் வைத்துப் பாதுகாக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனிடையே, மசூதியின் முழு பகுதியிலும் ஆய்வு நடத்த வேண்டும் என்று ஹிந்து அமைப்பினர் மனு தாக்கல் செய்திருந்தனர். இதனை ஏற்ற வாரணாசி மாவட்ட நீதிபதி ஏ.கே.விஸ்வேஷ், ஞானவாபி மசூதியில் சீலிடப்பட்ட பகுதியைத் தவிர பிற இடங்களில் தொல்லியல் துறை அறிவியல்பூர்வ ஆய்வை நடத்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.



வாரணாசி ஞானவாபி வளாகத்தில் திங்கள்கிழமை ஆய்வு மேற்கொள்ள வந்த இந்திய தொல்லியல் ஆய்வுத் துறைக் குழுவினர்.

இந்த உத்தரவை எதிர்த்து மசூதி குழு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த மனுவில், 'எதிர் தரப்பினர் மேல்முறையீடு செய்வதற்குக் கூட கால அவகாசம் அளிக்காமல், மசூதியில் அறிவியல்பூர்வ ஆய்வு நடத்த ஏஎஸ்ஐ அதிகாரிகள் அவசர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, இந்த ஆய்வுக்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டது.

இந்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் ஜெ.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறியதாவது:

மசூதியில் அறிவியல்பூர்வ ஆய்வு நடத்த உத்தரவு பிறப்பித்த மாவட்ட நீதிமன்றம், மனுதாரர் மேல்முறையீடு செய்வதற்கு ஏதுவாக சிறிது கால அவகாசம் அளித்திருக்க வேண்டும். அந்த வகையில், மசூதியில் ஆய்வு மேற்கொள்ள மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு வரும் 26-ஆம் தேதி மாலை 5 மணி வரை நடைமுறைப்படுத்தக் கூடாது.

இந்த கால இடைவெளியில், மனுதாரர் இந்த விவகாரம் தொடர்பாக அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 227-இன் கீழ் சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத்தை அணுகலாம். அவ்வாறு மனுதாரர் தாக்கல் செய்யும் மனு அல்லது மேல்முறையீட்டை, 'மசூதியில் இப்போதைய நிலையே தொடர வேண்டும்' என்ற உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு வரும் 26-ஆம் தேதி காலாவதி ஆவதற்கு முன்பாக உயர் நீதிமன்றம் விசாரிக்கவேண்டும் என்று உத்தரவிட்டனர்.

மேலும், இந்த உத்தரவு குறித்து மசூதியில் ஆய்வுப் பணியில் இருக்கும் ஏஎஸ்ஐ அதிகாரிகளுக்கு உடனடியாக தெரியப்படுத்துமாறு உத்தர பிரதேச அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தாவுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**ஆய்வுப் பணிகள் நிறுத்தம்:** உச்ச நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து மசூதியில் திங்கள்கிழமை காலையில் தொடங்கிய ஆய்வுப் பணிகளை தொல்லியல் ஆய்வுத் துறைக் குழு உடனடியாக நிறுத்தியது. இதனை ஏஎஸ்ஐ வாரணாசி மண்டல ஆணையர் குஷால் ராஜ் சர்மா உறுதிப்படுத்தினார்.

ஆய்வுப் பணியில் இடம்பெற்ற ஹிந்து மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் சுபாஷ் நந்தன் செளதரி தெரிவித்ததாவது:

மசூதியில் ஏஎஸ்ஐ குழு ஆய்வுப் பணிகளை திங்கள்கிழமை காலை 7 மணிக்குத் தொடங்கியது. மசூதி வளாகத்தை முதலில் ஆய்வு செய்தனர். பின்னர், மசூதியின் நான்கு மூலைகளிலும் குழுவினர் நிறுத்தப்பட்டு அளவிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கற்கள், செங்கற்கள் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், உச்ச நீதிமன்ற உத்தரவு குறித்த தகவல் கிடைத்ததும், ஆய்வுப் பணிகள் உடனடியாக நிறுத்தப்பட்டன என்றார் அவர்.